Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 08

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. தம்மோடு தாம் மட்டும் மயங்கும் மெய்கள் எவை
    1. க்,ச்,த்,ப் 2. ர்,ழ் 3. ய்,வ் 4. ங்,ர்,ய்

02. தம்மோடு தாம் மயங்காத மெய்கள் எவை
    1. க்,ச்,த்,ப் 2. ய்,வ் 3. ர்,ழ் 4. ல்,ழ்,ள்

03. உடனிலை மெய்மயக்கச்சொல்லாய் அமைவது
    1. பஞ்சு 2. பட்டை 3. பண்பு 4. பன்றி

04. மூன்று மெய்கள் மயங்கிவரும் சொல்லாய் அமைவது
    1. காய்ச்சல் 2.மாய்தல் 3. காட்சி 4. பாய்தல்

05. சரியான இனவெழுத்தினை கொண்டிராத எழுத்துச்சோடி
    1. ஐ - இ 2. ஔ - உ 3. ஊ - உ 4. ஏ - ஒ

பகுதி 2

01. பின்வரும் செய்யுளை, உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதுக

1. "உயிருடன் சென்ற ஒருமகள் தன்னிலுஞ்
   செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
   நன்னுதல் வியக்கும் நலத்தோரி யார்?"

   i. இக்கூற்று இடம்பெற்ற பாடப்பரப்பு யாது?
   ii. உயிருடன் சென்ற ஒருமகள் என குறிப்பிடப்படுபவர் யார்?
   iii. சேயிழை எனப்படுபவர் யார்?
   iv. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   v. இக்கூற்று இடம்பெற்ற இலக்கியத்தினை எழுதியவர் யார்?

2. "ஊனமே யான ஊனிடை யிருக்கும்
   உயிரினைத் துறந்துமொண் பூணாம்
   மானமே புரப்பத் தவனிமே லெவர்க்கும்
   வரிசையுந் தேற்றமும் மரபும்"

   i. இக்கூற்றினை கூறியவர் யார்?
   ii. இவ் இலட்சியவாதியின் இலட்சியம் என்ன?
   iii. ஒண்பூண் என குறிப்பிடப்படுவது யாது?